செ.வெ.எண்: 13 நாள்:07.04.2019

**கரூர் மாவட்டம்**

**வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பினை தேர்தல் நடத்தும் அலுவலரும், மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் பார்வையிட்டார்.**

அதன் விபரம் வருமாறு:

கரூர் மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்றத்தொகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி மையங்களில் பணியாற்றவுள்ள வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான முதற்கட்ட கணினி முறை குலுக்கல் 21.03.2019 அன்று நடத்தப்பட்டது. அதனடிப்படையில் பணிஒதுக்கீடுசெய்யப்பட்ட வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு முதற்கட்ட பயிற்சி சம்மந்தப்பட்ட மண்டல அலுவலர்களால் 24.03.2019 அன்று அந்தந்த சட்டமன்றத்தொகுதிக்குட்பட்ட இடங்களில் நடைபெற்றது.

பின்னர் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான இரண்டாம் கட்ட கணினி முறையிலான குலுக்கல் 04.04.2019 அன்று தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் திரு.த.அன்பழகன்.இஆப. அவர்களால் நடத்தப்பட்டது. இந்த இரண்டாம் கட்ட குலுக்கல் மூலம் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு தான் வசிக்கும் சட்டமன்ற தொகுதியை தவிர்த்து பிற சட்டமன்ற தொகுதியில் பணிபுரிவதற்கான ஆணை வழங்கப்பட்டது. அதனடிப்படையில் பணி ஒதுக்கீடு செய்யப்பட்ட வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான இரண்டாம் கட்ட பயிற்சி வகுப்புகள் இன்று நடைபெற்றது.

கரூர் சட்டமன்றத்தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு வெண்ணமலை சேரன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியிலும், அரவக்குறிச்சி சட்டமன்றத்தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு வள்ளுவர் மேலாண்மைக் கல்லூரியிலும், கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத்தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு புலியூர் இராணி மெய்யம்மை மேல்நிலைப்பள்ளியிலும், குளித்தலை சட்டமன்றத்தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு குளித்தலை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியிலும் இந்த பயிற்சி வகுப்புகள் நடைபெற்றது.

இதில் வெண்ணமலை சேரன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் கரூர் சட்டமன்ற தொகுதிக்கான உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் திரு.கு.சரவணமூர்த்தி முன்னிலையிலும், வள்ளுவர் மேலாண்மைக் கல்லூரியில் அரவக்குறிச்சி சட்டமன்றத்தொகுதிக்கான உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி.மீனாட்சி முன்னிலையிலும் நடைபெற்ற பயிற்சி வகுப்புகளை தேர்தல் நடத்தும் அலுவலரும், மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் இன்று(07.04.2019) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அப்போது, வாக்குச்சாவடி அலுவலர்களிடையே தேர்தல் நடத்தும் அலுவலர் பேசியதாவது:

தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள அனைவரும் நேர்மையுடனும், அர்பணிப்பு உணர்வுடனும் பணியாற்ற வேண்டும். வாக்குச்சாவடி அலுவலர்களாகிய நீங்கள் வாக்குச்சாவடி மையங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், வாக்காளர் வாக்குப்பதிவு தணிக்கை இயந்திரம் உள்ளிட்ட இயந்திரங்களை எவ்வாறு கையாளுவது என்பதை இந்த பயிற்சி வகுப்பின் மூலம் தெளிவாக தெரிந்துகொள்ள வேண்டும். வாக்குச்சாவடி மையங்களுக்கு வரும் மாற்றுத்திறனாளிகளுக்கு தேவையான உதவிகளை நீங்கள் செய்ய வேண்டும். அவர்களுக்கு எந்த இடையூறும் இல்லாமல் வாக்களிக்க உங்களால் ஆன உதவிகளை செய்ய வேண்டும். இந்த பயிற்சி மையங்களில் அமைக்கப்பட்டுள்ள மாதிரி வாக்குச்சாவடி மையத்தினை அனைவரும் பார்த்து உங்கள் பணி குறித்து மேலும், அறிந்துகொள்ளலாம்.

நீங்கள் தபால் வாக்கு அளிப்பதற்கான படிவங்களை எவ்வாறு பூர்த்தி செய்வது, உங்கள் பெயர் வாக்காளர் பட்டியலில் எந்த பாகத்தில் அமைந்துள்ளது என்பதை தெரிந்துகொள்ளவும் உங்களுக்கு உதவி செய்யும் வகையில் சேவை மையம் (FECILITATION CENTER) அமைக்கப்பட்டுள்ளது. தபால் வாக்கு அளிக்கும் படிவத்தில் சான்றளிக்கும் அலுவலர் (GAZETTED OFFICER) கையொப்பமிட வேண்டும் எனவே, உதவி மையத்தில் அதற்கான அலுவலரும் நியமிக்கப்பட்டுள்ளார். எனவே, நேர்மையாக அனைவரும் தங்கள் வாக்குகளை பதிவு செய்ய வேண்டும் என்றார்.

இதேபோல புலியூர் இராணி மெய்யம்மை மேல்நிலைப்பள்ளியில் கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத்தொகுதி உதவிதேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி.மல்லிகா முன்னிலையிலும், குளித்தலை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் உதவி தேர்தல் நடத்தும் அலுவலரும் குளித்தலை வருவாய் கோட்டாட்சியருமான திரு.எம்.லியாகத் முன்னிலையிலும் நடைபெற்ற பயிற்சி வகுப்புகளை துணை தேர்தல் நடத்தும் அலுவலரும், மாவட்ட வருவாய் அலுவலருமான திரு.ச.சூர்யபிரகாஷ் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

வெளியீடு:செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.